பாடம் 1

# மனித கடவுள்களா?

*புதிதாகப் பள்ளிக்குச் சென்ற முதல்நாளில் உனக்கு எப்படி இருந்தது? உனக்குப் படிக்கமில்லாத ஊருக்குச் சென்றிருந்தபோது எப்படி இருந்தது? பவுலும் பர்னபாவும்கூட தங்களுக்குப் படிக்கமில்லாத ஓர் ஊருக்குச் சென்றார்கள். அது குறித்துப் பார்ப்போமா?*

பவுலும் பர்னபாவும் லீஸ்திரா என்னும் ஒரு பட்டணத்திற்குச் சென்றனர். இதற்குமுன் லீஸ்திராவுக்கு அவர்கள் வந்ததில்லை. லீஸ்திராவில் உள்ள மக்கள் பரலோகத்தின் தேவனைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களாய் இருந்தார்கள்.

பவுலும் பர்னபாவும் ஒவ்வொரு நாளும் இயேசுவைப் பற்றி மக்களுக்குச் சொல்லி வந்தார்கள். ஒருநாள் லீஸ்திராவில் இயேசுவைப் பற்றிய நற்செய்தியைப் பவுலும் பர்னபாவும் சொல்லிக்கொண்டிருந்தபோது நடக்கமுடியாத ஒரு மனிதனும் அவர்களின் செய்தியைக் கேட்டுக்கொண்டிருந்தான். பிறந்ததிலிருந்தே அவன் நடக்க முடியாதவனாயிருந்தான்.

பவுல் அவனை உற்றுப்பார்த்தார். தேவனுடைய வார்த்தையில் அவனுக்கு விசுவாசம் இருப்பதைக் கண்டார். எனவே, நீ எழுந்து, காலூன்றி நிமிர்ந்து நில் என்று உரத்தச் சத்தமாய் அவனைப் பார்த்துச் சொன்னார். பவுல் சொல்லிய உடனே குதித்து எழுந்து நடந்தான்.

அங்கே கூடியிருந்த மக்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். அதுவுமல்லாமல், இப்படி ஓர் அதிசயம், அற்புதம் நடந்ததால் அப்படியே அசந்து போனார்கள். இப்போது பவுலும் பர்னபாவும் அவர்கள் கண்களுக்கு மனிதர்களாகத் தெரியவில்லை. அவர்கள் இருவரையும் கடவுள்களாக நினைத்தார்கள்.

தேவர்கள் மனுஷ ரூபமெடுத்து, நம்மிடத்தில்



## மனன வசனம்

**ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.**

**கலாத்தியர் 6:2.**

இறங்கி வந்திருக்கிறார்கள் என்று தங்களது மொழியிலே சத்தமாய்ச் சொன்னார்கள்.

மேலும், பவுலையும் பர்னபாவையும் கடவுள்கள் என்று நினைத்ததால் அவர்களுக்குப் பலியிடவும் துணிந்தார்கள். ஆனால், பவுலும் பர்னபாவும் அதற்குச் சம்மதிக்கவில்லை. மக்கள் அப்படிச் செய்துவிடாதபடி அவர்களைத் தடுக்க முற்பட்டார்கள்.

மனுஷரே இப்படிச் செய்யாதீர்கள். நாங்களும் உங்களைப் போல மனிதர்கள்தான். எங்களுக்கும் துன்பம் உண்டு. நீங்கள் இந்த வீணான தேவர்களை வழிபடவேண்டாம். வானத்தையும் பூமியையும் சமுத்திரத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனையே வழிபடுங்கள். நீங்கள் உங்கள் விருப்பம் போல இதுவரை வாழ்ந்தீர்கள்.

ஆனாலும், தேவன் மழை, வெயில், செழிப்பு யாவையும் தந்து உங்களை நன்றாகக் காப்பாற்றி வருகிறார். அவரே தேவன். அந்த தேவன் இயேசு கிறிஸ்துதான். இனிமேல் இயேசு தேவனையே வழிபடுங்கள் என்றார்கள்.

ஆனால், பவுல், பர்னபாவின்மேல் பொறாமைகொண்ட யூதர்கள் சிலர் அங்கே வந்திருந்தார்கள். அவர்கள் லீஸ்திரா பட்டணத்தாரிடம் பவுல், பர்ன பாவைப்பற்றி மிகவும் பொய்யாகக் குற்றம் கூறினார்கள். மக்களும் நம்பிவிட்டார்கள். எனவே, பவுல், பர்னபாவை சற்று நேரத்திற்கு முன், கடவுள் என்று புகழ்ந்தவர்கள் இப்போது இகழத் தொடங்கினார்கள்.



அதுவுமன்றி பவுல்மேல் ஏகப்பட்ட கற்களைத் தங்கள்

# செய்தி

**பிறருக்கு உதவும்போது**
**நாம் தேவனுக்குச் சேவைசெய்கிறோம்.**

இஷ்டம் போலச் சரமாரியாக எறிந்தனர். பவுலைக் கொன்று விடவேண்டும் என்பதே அவர் களது நோக்கமாக இருந்தது. எனவே, தங்களது கோபத்தை யும் ஏமாற்றத்தையும் அடிகளாகப் பவுலின்மேல் விழச்செய்தார்கள். பவுல் மயங்கி விழவும் அவர் இறந்துவிட்டார் என்று நினைத் துப் பட்டணத்திற்கு வெளியே அவரை எறிந்து விட்டார்கள்.

தேவகிருபையால் பவுல் சாக வில்லை. சீஷர்கள் பவுலுக்கு உதவியாக அவரைச் சூழ்ந்து நின்றார்கள். பவுல் எவருக்கும் பயப்படவில்லை. மீண்டும் உற்சாகமாகப் பட்ட ணத்திற்குள் தேவனைப் பற்றிக் கூறச் சென் றார்.

என் செல்லமே! பவுல், பர்னபா போன்று நீயும் தேவனுடைய வேலையைச் சோர்வின்றி செய்.

*செய்முறை:* கீழே கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் ஒவ்வொரு வார்த்தையிலும் உள்ள இரண்டாம் எழுத்தை அடித்துவிடு. மீதியுள்ளவற்றைச் சேர்த்துக் கோட்டில் எழுது. மேலான ஒரு செய்தியை நீ காணமுடியும்.

**பி ெ ற அ ரு ஆ க் இ கு ஈ**

**உ எ த ஏ வு உ ம் ஊ போ ஐ து**

**நா க ம் வ தே கி வ கீ னு ப க் பி கு பீ ச்**

**சே ழு வை யி செ டீ ய் ட் கி டு றோ லு ம்.**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புதிர் 1